

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. ஏற்பாட்டில் நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் 100 பேர், அ.தி.மு.க கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் 100 ஆக மொத்தம் 200 பேர் கழகத்தில் இணையும் நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது. அப்போது கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் 200 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர். அவர்கள் அனைவரையும் அமைச்சர் கே.என்.நேரு வரவேற்று கழக இருவண்ண வேட்டியை வழங்கினார். நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மு.அப்துல் வகாப், மாலை ராஜா, பேச்சி பாண்டியன், ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், வசந்தம் ஜெயக்குமார், முத்துச்செல்வி, சரவணன், பரமசிவ ஐயப்பன், சுரேஷ், தர்மன், கிரிஜா குமார், சு.சுப்பிரமணியன், துபாய் சாகுல், கதீஜா இக்லாம் பாசிலா, கருப்பசாமி கோட்டையப்பன், மீரான் மைதீன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (16.12.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் தலைமையில் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் நடைபெறும் ”சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா 2025” ஆம் ஆண்டுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சே.ரா.காந்தி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் சீ.சௌம்யா மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### கிருஷ்ணகிரியில் வேலூர் மண்டல தி.மு.க.

# தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர்கள் டி.ஆர்.பி.ராஜா – அர.சக்கரபாணி சிறப்புரை! தே.மதியழகன் எம்.எல்.ஏ. – ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. –ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. – தேவராஜ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, டிச. 17-

கிருஷ்ணகிரி தேவராஜ் மகால் திருமண மண்டபத்தில், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்கள் அடங்கிய வேலூர் மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்எல்ஏ., தலைமை வகித்தார். மண்டல பொறுப்பானர் இசை வரவேற்புரையாற்றினார்.

வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் கே. தேவராஜ் எம்.எல்.ஏ., ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்

இதில், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தமிழக தொழில்துறை அமைச்சருமான டிஆர்பி. ராஜா பங்கேற்று, சிறப்புரையாற்றினார். இதில், சிறப்பு அழைப்பாளராக தமிழக உணவு மற்றம் உணவு வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்று, ஆலோசனை வழங்கினார்கள்

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக சட்டமன்ற உறுப்பினர்கள் குடியாத்தம் அமுலு விஜயன் , ஆம்பூர் ஏ.சி.வில்வநாதன் , திருப்பத்தூர் ஏ. நல்லதம்பி , ஒசூர் மாநகர மேயர் எஸ்.ஏ.சத்யா , சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் வினோத் காந்தி , தகவல் தொழில் நுட்ப அணி மாநில நிர்வாகிகள் கோ.வி.லெனின் , மாநில துணைச் செயலாளர் நவீன் ஆகியோர்கலந்துகொண்டனர்

அப்போது கீழ்க்கண்ட தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன

எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் திமுக கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்று திராவிட நாயகன் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கை எட்ட இளம் தலைவர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் தளத்திலும் களத்திலும் முழுமையாகப் பணியாற்றி இந்த மண்டலத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் வெற்றியை உறுதி செய்ய பாடுபடுவோம் என இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

தகவல் தொழில்நுட்ப அணியின் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் AC3 வரையிலான நிர்வாகிகளை மண்டலம் முழுவதும் நியமித்து மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழகங்களின் ஒத்துழைப்புடன் அணியின் நிர்வாகிகள் அனைவருக்கும் சமூக வலைத்தளப் பயிற்சியை அளித்து தேர்தல் பணியில் நூற்றுக்கு நூறு சதவீதம் அணியின் வலிமையை வெளிப்படுத்தி வெற்றியை உறுதி செய்வோம் என்று இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும், களப்பணியின் மூலமாகவும் ஒவ்வொரு வாக்காளரிடமும் கொண்டு சேர்த்து, திராவிட நாயகன் ஆட்சியின் திட்டங்களால் ஒவ்வொரு குடும்பத்திலும் பயன் பெற்றிருப்பவர்களின் வாக்குகளை திமுகவுக்கு ஆதரவாக பதிவு செய்யும் வகையில் மண்டலத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகளும் ஒருங்கிணைந்து பணியாற்றுவோம் என இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

கழக ஆட்சிக்கு எதிராகவும், முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகியோரைப் பற்றியும் வன்மத்துடன் வதந்திகளை பரப்பும் whatsapp யுனிவர்சிட்டி வகையறாக்களான பா.ஜ.க., அ.தி.மு.க., நாதக உள்ளிட்ட எதிரிகள், புதுப்புது உதிரிகள் என அனைவரையும் கருத்தாயுதத்தால் எதிர்கொள்கின்ற வகையில் சமூக வலைத்தளத்தில் பதிலடிகளை கொடுத்து, களத்திலும் அவர்களை படுதோல்வியடைய செய்வோம் என இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

எப்போதும் தேர்தல் களத்தில் முன்னிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்கள போராளிகளான தகவல் தொழில்நுட்ப அணியினரை ஊக்கப்படுத்தும் வகையில் இந்த மண்டல ஆலோசனைக் கூட்டத்திற்கு அனுமதி அளித்த கழகத் தலைவர் முதலமைச்சர், துணை முதலமைச்சர், அணியின் செயலாளரான தொழில்துறை அமைச்சர் ஆகியோருக்கும், இந்த சிறப்பான நிகழ்வுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய இந்த மண்டலத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றியினை தெரிவித்து தாய்க்கழகம் மற்றும் சார்பு அணிகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுவோம் என்று இந்தகூட்டம்தீர்மானிக்கிறது.

இக்கூட்டதில் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முருகானந்தம், ரவி , தொன் போஸ்கோ , அருள்நிதி , மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் காளிதாஸ் ,விஜய் ஆனந்த் ,சத்திய பாரதி ,சுரேந்தர் , சகிரா, கலைவாணன், திலீபன் மதியழகன், வினோத் குமார், துவராகேஷ், நிஷா தமிழரசு, சுஜீத்ரா, இர்பான் , கோகுல் அஸ்வின், பிரபாகரன், செந்தில்குமார், செல்வகுமார், தேவநாதன் , யுவராஜா, கார்த்திக், சல்மா, ராம்கி, பிரகாஷ், முரளி, நதிம் அகமத், கார்த்திக், குணசேகரன், முரளிதரன், தேன்மொழி உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயராஜசேகர் நன்றி உரையாற்றினார்

### கூகுள் நிறுவனத்துடன் ஒப்பந்தம்!

# தமிழகத்தில் 20 லட்சம் இளைஞர்களுக்கு ஏஐ தொழில்நுட்பம் குறித்து திறன் பயிற்சி!

## கிருஷ்ணகிரியில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தகவல்!

கிருஷ்ணகிரி, டிச. 17-

கிருஷ்ணகிரி ஸ்ரீ தேவராஜ் தேவராஜ் மகாலில் வேலூர் மண்டலத்திற்குட்பட்ட கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, வேலூர் மண்டல, திமுக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது.



கூட்டத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மதியழகன் எம்எல்ஏ., தலைமை வகித்தார். தகவல் தொழில்நுட்ப அணி மாநிலதுணைச்செயலாளர் இசை வரவேற்றார். உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தொழில்துறை அமைச்சரும், தகவல் தொழில்நுட்ப அணி மாநில செயலாளருமான டிஆர்பி ராஜா செய்தியாளர்களிடம் கூறியதாவது: திமுக தகவல் தொழில்நுட்ப அணி மண்டல கூட்டங்கள் தமிழகம் முழுவதும் நடந்து வருகிறது. அதன்படி வேலூர் மண்டல அளவிலான கூட்டம் இங்கு நடந்தது.

வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி 234 தொகுதிகளிலும் வெற்றி பெற கடுமையாக பாடுபட வேண்டும் என அறிவுரை வழங்கி உள்ளோம். தொழில் முதலீட்டாளர் மாநாட்டில் போடப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் செயல்படுத்த எனது தலைமையில், தலைமைச் செயலாளர் மற்றும் அனைத்து துறை செயலாளர்கள் இணைந்து ஒருங்கிணைப்புக் குழுவை முதலமைச்சர் உருவாக்கியுள்ளார்.

இந்தக் குழு ஒப்பந்தங்களை முதலீடுகளாக மாற்று தொடர்பான தொடர்ந்து ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி வருகிறோம். ஒப்பந்தங்கள் அனைத்தும் முதலீடுகளாக மாற்ற 70% பணிகள் நிறைவு பெற்றுள்ளது. முதல்வர், வெளிநாடு சுற்றுப்பயணம் சென்று பெறப்பட்ட ஒப்பந்தங்களும் 100% முதலீடுகளாக வரும் என்கிற சூழல் உள்ளது.

தமிழகத்தில் உள்ள 20 லட்சம் இளைஞர்களுக்கு ஏஐ தொழில்நுட்பத்தில் வேலைவாய்ப்பு குறித்த திறன் பயிற்சி அளிக்கும் வகையில் கூகுள் நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. போர்டு நிறுவனம் மீண்டும் சென்னையில் பணிகளை தொடங்கும் பணி நடைபெற்று வந்து கொண்டிருக்கிறது. விரைவில் அதற்கான அறிவிப்புகளை வெளியிடுவார்கள். திமுக ஆட்சியில் தான் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏராளமான தொழிற்சாலைகள் வந்துள்ளது இன்னும் அதிக தொழிற்சாலைகள் வரவுள்ளன.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### துணை முதல்வர் பிறந்தநாள் விழா! வல்லம் மத்திய ஒன்றியம் – நாட்டார் மங்கலத்தில்

# மாவட்ட தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுனர் அணி சார்பில் நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் வழங்கினார்!

செஞ்சி டிச 17-

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுகஅமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில் வல்லம் மத்திய ஒன்றியம் நாட்டார்மங்கலம் ஊராட்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு புயல் மழையால் பாதிக்கப்பட்ட ஆதி திராவிடர் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் தமிழரசன் தலைமை தாங்கினார்.

ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாட்டார்மங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் மாரியம்மாள் மாணிக்கம் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் கலந்து கொண்டு நாட்டார்மங்கலம் ஊராட்சியில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட 100க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் நல மக்களுக்குஅரிசி புடவை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

### 25 ஆண்டுகளுக்கு பின் நடைபெற்ற

# சென்னை பிரஸ் கிளப் தேர்தலில் நீதிக்கான கூட்டணி வெற்றி!

## தலைவராக சுரேஷ் வேதநாயகம் தேர்வு!

சென்னை, டிச. 17-

சென்னை பிரஸ் கிளப் தேர்தலில் நீதிக்கான கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். சென்னை சேப்பாக்கம் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள சென்னை பிரஸ் கிளப்புக்கு (சென்னை பத்திரிகையாளர் மன்றம்) 1999ம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. அதன் பிறகு தேர்தல் நடத்தப்படாமல் ஒரு குறிப்பிட்ட நபர்கள் பத்திரிகையாளர் மன்றத்தை ஆக்கிரமித்து இருந்தனர். புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படாமல் இருந்தது, பத்திரிகையாளர் அல்லாதவர்களை முறைகேடாக உறுப்பினர்களாக சேர்த்தது, பத்திரிகையாளர் மன்றத்தின் நிதியில் முறைகேடு செய்தது என பல குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதையடுத்து தேர்தல் நடத்தக் கோரி பத்திரிகையாளர்கள் பலர் போராடினர். சட்டப்போராட்டங்களும் நடந்து வந்தன. இந்நிலையில் 2024ம் ஆண்டு தொடக்கத்தில் மூத்த பத்திரிகையாளர்கள் தலைமையில் சிறப்பு வழிகாட்டு குழு அமைக்கப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகள் திரும்ப பெறப்பட்டு, புதிதாக உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். பழைய உறுப்பினர்கள் முறையாக புதுப்பிக்கப்பட்டனர்.

இதையடுத்து, உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி பாரதிதாசனை தேர்தல் நடத்தும் அதிகாரியாக நியமித்து, அவர் தலைமையில் தேர்தல் நடத்த வழிவகை செய்யப்பட்டது. இதனை எதிர்த்து ஒரு சிலர் தொடர்ந்த வழக்கும், சென்னை உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதைத்தொடர்ந்து, 25 ஆண்டுகளுக்கு பின் சென்னை பத்திரிகையாளர் மன்றத்திற்கு டிச.15ம் தேதி தேர்தல் நடைபெறும் என நீதிபதி பாரதிதாசன் கடந்த நவ.28ம் தேதி அறிவித்தார். இதில் சென்னை பத்திரிகையாளர் மன்றத்துக்கு ஒரு தலைவர், இரண்டு துணைத் தலைவர்கள், ஒரு பொதுச்செயலாளர், ஒரு இணைச் செயலாளர், ஒரு பொருளாளர் ஆகிய 6 நிர்வாகிகளும், 5 நிர்வாக குழு உறுப்பினர்களும் தேர்வு செய்வதற்கான தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனு தாக்கல் நவம்பர் 30ம் தேதி முதல் டிச.7ம் தேதி வரை நடந்தது. வேட்பு மனுக்கள் டிச.9ம் தேதி பரிசீலிக்கப்பட்டது. டிச.10ம் தேதி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை வேட்பு மனுக்களை வாபஸ் பெற கால அவகாசம் வழங்கப்பட்டது. அன்றைய தினம் மாலை 6 மணிக்கு இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இந்த தேர்தலில் நீதிக்கான கூட்டணி, ஒற்றுமை அணி, மாற்றத்திற்கான அணி மற்றும் சுயேச்சையாகவும் 44 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்நிலையில், சென்னை பிரஸ் கிளப்பில் நேற்று முன்தினம் தேர்தல் விறுவிறுப்புடன் நடந்தது. காலை 10 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 5 மணிக்கு நிறைவடைந்தது. இதில் மொத்தம் 1502 வாக்குகளில் 1371 வாக்குகள் பதிவானது. இது 91.27 சதவீதமாகும். மாலை 6 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. வாக்கு எண்ணிக்கை தொடங்கியது முதல் நீதிக்கான கூட்டணி வேட்பாளர்கள் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை முடிந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

நீதிக்கான கூட்டணியில் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட சுரேஷ் வேதநாயகம் (தினகரன்), பொதுச்செயலாளராக அசீப் முகமது (அரண் செய்), பொருளாளராக மணிகண்டன் (ஜெயா டிவி), துணை தலைவர்களாக மதன் (நியூஸ் 18 தமிழ்நாடு) மற்றும் சுந்தரபாரதி (புதிய தலைமுறை), இணை செயலாளராக நெல்சன் சேவியர் (ஒன் இந்தியா) ஆகியோர் வெற்றி பெற்றனர். நிர்வாக குழு உறுப்பினர்களாக நீதிக்கான கூட்டணியைச் சேர்ந்த ஸ்டாலின் (புதிய தலைமுறை), அகிலா ஈஸ்வரன் (தி இந்து), பழனிவேல் (பாலிமர் டிவி), விஜயகோபால் (ஏஎன்ஐ) மற்றும் ஒற்றுமை அணியை சேர்ந்த கவாஸ்கர் (தீக்கதிர்) ஆகியோர் வெற்றி பெற்றனர்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதியில் உள்ள அரசு பொது மருத்துவமனை ரூ.20 கோடியில் அதிநவீன அவசர பிரிவு மருத்துவமனையாக கட்டப்படுவதை யொட்டிமாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., நேரில் சென்று பார்வையிட்டு அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். இதில் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு ,ஒன்றிய செயலாளர்கள் பி.வெங்கடேசன் கோ. குமரபாண்டியன், மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணமேனன் மற்றும் டாக்டர்கள் செவிலியர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஓ.செ. விசுவநாதன்

### டிசம்பர் 17 (2011)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சென்னைக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தபோது, 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தீச்சட்டி ஊர்வலம் நடத்தினார்.

1968ஆம் ஆண்டு மின்சார வாரியத்தில் பணிபுரிந்தபோது, தனது பகுதியில் தொ.மு.ச. கிளையினைத் துவக்கி, பின்னர் பெரியார் மாவட்ட த.நா.மின்வாரிய தொ.மு.ச. செயலாளராகப் பணியாற்றினார்.

அதன்பின்னர், பெருந்துறை ஒன்றியக் கழகச் செயலாளராகவும், ஈரோடு மாவட்ட துணைச் செயலாளராக தொடர்ந்து இருமுறையும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.